Book 1

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# புதிய நினைவூட்டல்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

1. மனிதர்களுக்கு அவர்களுடைய கணக்கு விசாரனை (நாள்) நெருங்கிவிட்டது ஆனால் அவர்களோ வெறுப்புற்று புறக்கனித்தவர்களாக உள்ளனர்.

2. அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து புதிய நினைவூட்டல் வரும்போது, அவர்கள் அதை விளையாடியவர்களாக செவிமடுக்கிறார்களே அன்றி வேறில்லை.

அல் - குர்ஆன் 21 : 1,2


செப்டம்பர்
1999
SEPTEMBER

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

ஜமாதுல்
அவ்வல்
1420

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

ஜமாதுல் அவ்வல் 1420
செய்தி 1

செப்டம்பர் 1999
நினைவு 1

ஆசிரியர்

C.S. ரஃபியுதீன்

துனை ஆசிரியர்கள்:

N.A. அஹமது ஹுஃசேன்

K. முஹமது ஷரீப் மஜாஹிரி

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

1.தலையங்கம்

2.குர்ஆனின் திறவுகோல்

3. குர்ஆனும் எண்ணிக்கையும்

4. அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள் தூதருக்கு கட்டுப்படுங்கள்

5. பரிந்துரை

6. அல்லாஹ் மட்டும்

7. குர்ஆனில் இறைவனின் முத்திரை 19

8. சிந்தனைக்கு

# தலையங்கம்

**அல்ஹம்த்துலில்லாஹ்**

குர்ஆன் மட்டுமே மார்க்கம் என்று கூற தமிழில் தொடங்கப் பட்டு வெளிவரும் புத்தகம் இது அகிலங்களுக்கெல்லாம் அதிபதியும் வானம், பூமி ஆகியவற்றின் அனைத்து ரகசியங்களையும் அறிந்தவராகிய அல்லாஹ்வின் சொற்க்களான அல்குர்-ஆனின் பக்கம் மக்களை அழைப்பதை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு இன்ஷா அல்லாஹ் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

குர்ஆன் எளிதில் விலங்காது, அதற்கு தகுதிகள் பல வேண்டும் என்று பற்பல விதங்களில் ஷைத்தான்கள் போட்டு வைதிருக்கும் போலித்தடைகளை, அவை போலித்தடைகளே என்று நிரூபித்து குர்ஆன் இலகுவானது (54:17) என்ற அல்லாஹ்வின் செல்லை மக்களிடம் எத்திவைப்பதையும் இவ்விதழ் கடமையாகக் கொள்ளும். அதில் உள்ள புதிய நினைவூட்டல்களை நம்பிக்கை கொண்டவர்களுக்கு வெளிப்படுத்தும். அல்குர் ஆன் பொய்ச் செய்திகளின் ஆதாரங்களை தகர்த்தெறிவதை இவிதழ் எடுத்துக் காட்டும்.

குர்ஆனை அனைவரும் கற்றுக் கொள்ள ஆர்வமூட்டும், வாழ்வியல் விஷயங்களின் குர்ஆன் கூறும் தீர்வை மக்கள் முன் வைக்கும் அல்லாஹ் எவ்வாறெல்லாம் நம்பிக்கையாளர்களுக்கு குர்ஆனைக் கற்றுக்கொடுக்கிறார் (55:1-2) என்பதை நடைமுறைப் படுத்திக்காட்டும் ஆதாரத்துடனேயே எதையும் எழுதும், ஏற்றுக்கொள்ளும். அல்லாஹ்வின் ஆதாரங்கள் எவ்வளவு உறுதியானவை என்பதைத் தெளிவுடன் கூறும். இன்னும் குர்ஆன் காட்டும் வழியிலேயே தொடர்ந்து செல்லும்.

இவ்விதழ்தனை வாங்கிப் படிக்கும் வாசகர்கள் விலை மதிப்பில்லா பற்பல பயன்களைப் பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். பற்பல உலக வேலைகளில் மூழ்கி இருக்கும் சகோதரர்களுக்கு, குர் ஆன் கூறும் செய்திகளை இலகுவாக, தொகுத்துத் தரும் பணியில் இவ்விதழ் ஈடுபடும். இதன் மூலம் அல்லாஹ் தன் நல்லடியார்களுக்குத் தன் வேத்த்தில் கூறுவதென்ன என்று அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டும். மேலும் இதில் கூறப்பட்டுள்ள வசனங்களைத் தங்களிடமுள்ள குர்ஆன் மொழிபெயற்ப்போடு ஒத்துப் பார்ப்பதால் அவர்களுக்கு குர்ஆனோடு நேரடித் தொடர்பும் உண்டாகும். இன்னும் பற்பல பயன்களையும் இதழின் வசக சகோத்ரர்கள் அடைய வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இவ்விதழின் மேலான வளர்ச்சிக்கு வாசக சகோதரர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்கினால் அவற்றைப் பரிசீலித்து செயல்படுத்தப்படும், இன்ஷா அல்லாஹ், அல்லாஹ் தன் தூதர் மூலம் தந்த செய்திகளை மக்களிடம் எத்திவைப்பதில் நாட்டம் உள்ள சகோதரர்கள். இவ்விதழை சிந்திக்க கூடிய தங்கள் சகோதரர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும். இதன் மூலம் அல்லாஹ் தன் அருள்மறையில் 3:104ல் கூறுவது போல் வெற்றி பெற்றோர் கூட்டத்தில் இன்ஷா அல்லாஹ் நாம் அனைவரும் இடம் பெறலாம்.

# *****குர்ஆனின் திறவுகோல்*****

(தொகுப்பு:- K.H. அபூபக்கர் ஸித்தீக்)

நம்முடைய இறைவனாகிய அல்லாஹ் (GOD, கடவுள்) எல்லா மக்களையும் குர்ஆனை படித்து அதை புரிந்து கொள்ள அனுமதிக்கவில்லை. காரணம் குர்ஆன் ஒரு சாமானியமான புத்தகம் அல்ல. இது இவ்வுலகிற்கு இறைச் செய்திகளை தாங்கிய இறைப்புத்தகம்.

இந்த குர்ஆன் கண்ணியம் மிக்கது (50:1) இந்த குர்ஆன் மகத்தானது (15:87) இந்த குர்ஆன் சங்கையானது விவரிக்கப்பட்டது (55:77, 5:114)

மிகவும் பிரத்தியோகமான மக்கள் மட்டுமே குர் ஆனுடைய செய்திகளை உணர்ந்து அதன் பயனைப் பெற அனுமதிக்கப் படுகின்றனர்.

குர்ஆனை ஏற்றுக் கொண்டவராக நாம் ஆவதற்கு உள்ள வரம்புகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இப்போது "குர்ஆனின் திறவுகோல்" பற்றி அறிந்து கொள்வோம். இந்த திறவு கோல் இல்லாமல் ஒரு மனிதன் குர்ஆனின் ஒரு வசனத்தையோ அல்லது ஒரு வார்த்தையோ கூட நிச்சயமாக உணர்ந்து, புரிந்து அதன் பயனைப் பெற்றுக் கொள்ளவே முடியாது.

அரபி மொழியைத் தாய் மொழியாக கொண்டவர்களும் மேலும் அரபு மொழியின் மீது அதிகாரமும் உரிமையும் பெற்ற அறிஞர்களும் கூட குர்ஆனை புரிந்து கொள்வதை விட்டும் தடுக்கப்பட்டு உள்ளனர். குர்ஆன் அல்லாத மற்ற புத்தகங்களை புரிந்து கொள்ள முடிந்த பலரால் குர்ஆனை புரிந்து கொள்ள இயலவில்லை. காரணம் இறைவன் தாமே இந்த குர் ஆனை புரிந்து கொள்வதை விட்டும் அவர்களை தடுத்துள்ளார்.

நாம் குர்ஆனை அணுகுவதை அல்லாஹ்வுடைய மறைவான சேனைகள் கட்டுப் படுத்துகின்றார்கள். எவர்கள் வசம் 'குர்ஆனின் திறவுகோல் இருக்கிறதோ அவர்கள் மட்டுமே குர்ஆனை அணுகுவதற்கு அறிந்து, புரிந்து பயனடைவதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள்.

குர்ஆனின் திறவுகோள் என்றால் என்ன?

குர் ஆனின் திறவுகோல் என்பது குர்ஆனை நம்புவது. குர்ஆன் முழுமையானது, குர்ஆன் நிறைவானது. குர்ஆன் முழு விளக்கமானது. மேலும் மார்க்க ஆதாரம் குர்ஆன் மட்டுமே என்று உறுதியாக நம்புவது {6:19,38,114)- இதுவே குர்ஆனின் திறவு கோலாகும்.

மேலும் மனிதர்களில் எவர்கள் குர்ஆன் அல்லாத வேறு எதையும் மார்க்க ஆதாரமாகக் கொள்கின்றார்களோ, உதரணமாக நபி அவர்கள் சொன்னதாகவும், செய்ததாகவும் பொய்யாக அவர்கள் மீது இட்டுக்கட்டிய பல செய்திகளையும் மார்க்க ஆதாரமாகக் கொண்டு செயல் படுகிறார்களோ அவர்கள் நிச்சயமாக ஒரு போதும் குர்ஆனை அணுகவும். புரிந்து அதன் பயனை பெற்றுக் கொள்ளவும் முடியாது. இதை அல்லாஹுத ஆலா குர்ஆனில் சூரா 18ல் வசனம் 57ல் குறிப்பிடுகின்றார்.

இதை அரபி அல்லாத மொழியில் நாம் ஆக்கியிருந்தால் அவர்கள் ஏன் அந்த மொழியில் இறங்கியது என்று கேட்டிருப்பார்கள்! அரபியரோ, அது அல்லாதவரோ, கூறும்: நம்பிக்கை கொண்டோருக்கு இது நேர் வழிகாட்டியும் மருந்தும் ஆகும். ஆனால் இதை நம்பாதவர்களே அவர்கள் இது குறித்து செவிட்டுத் தனத்திலும், குருட்டுத் தனத்திலும் இருப்பார்கள். மிக நீண்ட தொலைவிலிருந்து அழைக்கப்படுவர் போலாவர்கள்" (41:44)

## குர்ஆனும், எண்ணிக்கையும்

"அவர் ஒவ்வொரு விஷயத்தையும் எண்ணிக்கையைக் கொண்டு மட்டுப் படுத்தியுள்ளார்" (72:28)

கணக்கிடுவதில் மேதைகளுக்கெல்லாம் மேதையான (அல் ஹஸீப்) அல்லாஹ்வின் குர்ஆனில் காணப்படும் மேற்காணும் வசனத்தின்படி குர்ஆனுக்கும் எண்ணிக்கைக்கும் உள்ள தொடர்பையும் அவற்றின் அமைப்பில் உள்ள அற்புதங்களையும் காண்போம்.

2குர்ஆனில் :-

1. ஷஹர் - (மாதம்) என்னும் வார்த்தை - 12 முறை உள்ளன.

2. யவ்ம் - (நாள்) என்னும் வார்த்தை 365 முறைகள் உள்ளன.

3. இய்யாம் - (நாட்கள்) என்னும் வார்த்தை 30 முறைகள் உள்ளன.

4. ஷைத்தன் மற்றும் மலக்கு (வானவர்) ஆகிய இரண்டும்சமமாக88 முறைகள் உள்ளன.

5. துனியா (இம்மை ) மற்றும் ஆகிரா (மறுமை) ஆகிய இரண்டும் சமமாக 115 முறைகள் உள்ளன.

6. ஈமான் (நம்பிக்கை) மற்றும் குஃப்ர் (நிராகரிப்பு) ஆகிய இரண்டும் 25 முறைகள் சமமாக உள்ளன.

7. குல் (சொல்வீராக) மற்றும் காலு (அவர்கள் சொன்னார்கள்) ஆகிய இரண்டும் 332 முறைகள் சமமாக உள்ளன.

8. கிஸ்த் (நீதம்) மற்றும் ஜுல்ம் (அநீதம்) ஆகிய இரண்டும் 15 முறைகள் உள்ளன.

மாதங்கள் 12, மாதத்தின் நாட்கள் 30, வருடத்திற்கு 365 நாள், மேலும் நல்லவையும் தீயவையும் சமமான எண்ணிக்கையில் குர்ஆனில் அமையப்பெற்றிருப்பது தற்செயல் என்றா எண்ணுகிறீர்கள்? இவை அல்லாஹ் தன் வேதத்தை ஒரு அற்புதமான கனித கட்டமைப்பில் அமைந்திருப்பதை தெளிவாக எடுத்துகாட்டவில்லையா?

## அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள்

தொடர் - 1 அபூபுஷ்ரா

அல்லாஹ் இறக்கியருளிய அல் குர்ஆன் மட்டும் நமக்கு வழிகாட்டப்போதாது நம் முன்னோர்கள் மூலம் பெற்ற செய்திகளையும் மார்க்க ஆதாரமாகக் கொள்ள வேண்டும்! என்போர் அடிக்கடி கூறும் வசனம் இது. அவர்கள் இவ்வசனத்திற்கு கூறும் விளக்கம் என்ன வென்றால் அல்லாஹ் இறக்கிய வேதம் அல்குர் ஆன், அதற்குக் கட்டுப்படுதல் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுதல். தூதர் முஹம்மது கூறியதெல்லாம் ஹதீஸ்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது எனவே தூதருக்குக் கட்டுப்படுவதென்றால் ஹதீஸ்களுக்குக் கட்டுப்படுவது தான் என்பதே!

ஒவ்வொன்றாக இவ்விளக்கத்தில் உள்ள பற்பல கோளாறுகளைப் பார்ப்போம். முதலில், இவ்விளக்கத்தின்படி அல்லாஹ் ஒன்றையும், நபி மற்றொன்றையும் கூறியிருக்கின்றார்கள் என்று ஆகிறது. ஆனால் குர்ஆன் என்ன கூறுகிறது தெரியுமா? சூரா 69 வசனம் 40 ஐ பாருங்கள் "நிச்சயமாக இதுவே (குர்ஆன்) கண்ணியமிக்க தூதரின் சொல்லாகும்" மேலும் 43ம் வசனம் முதல் "இது அகிலத்தாரின் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதாகும் இது அல்லாத வேறு எதையும் அவர் கூறியிருப்பாரானால், அவருடய நாடி நரம்பை நாம் தரித்திருப்போம் என்றும் அல்லாஹ் கூறுகிறார். இது, தூதர் தனிப்பட்ட முறையில் எதுவும் கூறுவதற்கில்லை. அல்லாஹ் கூறுவதை (குர்ஆனை) தூதுவர் கூறுவார். தூதர் நமக்குத் தன் நாவால் கூறிய குர்ஆனுக்கு கட்டுப்படுவதான் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்படுவதாகும் என்பதை தெளிவுபடுத்துகிறது.

அல்லாஹ் நேரடியாகக் குர்ஆனை நமக்குத் தரவில்லை. முஹம்மது நபிக்கு வஹி மூலமாக சிறிது சிறிதாகத்தன் குர்ஆன் இறக்கப்பட்டது. எனவே தூதருக்கு கட்டுப்படுவது என்பது தூதர் நமக்குத் தந்த தூதரின் அங்கீகரம் பெற்ற தூதுச் செய்தி குர் ஆனுக்குக் கட்டுப்படுவதே (6:19)

குர்ஆன் மட்டுமின்றி தூதர் தனிப்பட்ட முறையில் கூறியவையும் வஹிமூலம் அவர் அல்லாஹ்விடம் இருந்து பெற்றதே, தூதர் தன் நாவால் கூறிய அனைத்தும் வஹியின் அடிப்படையிலேயே என்று வதிப்போர் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டு அல்லாஹ்வின் மீது பழி கூறுகின்றனர், என்பதைக் குர்ஆனைக் கொண்டே நாம் நிரூபிக்க முடியும்.

உதாரணமாக 66:1 ல் அல்லாஹ் ஹலாலக்கிய ஒரு பொருளை தன் மனைவியரின் திருப்தியை நாடி நபி ஹராமாக்கியதற்காக அல்லாஹ் நபியைக் கண்டிக்கிறார். தூதர் கூறிய அனைத்தும் வஹீயின் அடிப்படையிலேயே என்போர் என்ன கூறுகிறார்கள்? அல்லாஹ் தான் ஹலாக்கிய ஒன்றை ஹராமாக்கும் படி வஹீ அறிவித்து விட்டு பின்னர் நபி அவ்வாறு செய்யும்போது கண்டிப்பது போல் கண்டிக்கிறார் என்றா? (ஸுப்ஹானல்லாஹ்)

மேலும் 80வது சூரா 1 முதல் 10 வரை உள்ள வசனங்களில் முஹம்மது நபியை ஆர்வத்துடன் தேடி வந்த குருடரைக் கடுகடுத்து, புறக்கணித்து விட்டு ஒரு பணக்காரனின், பால் தன் கவனத்தைச் செலுத்தியதை அல்லாஹ்

கண்டிக்கிறார். இங்கு ஒரு பணக்காரனின் பால் தன் கவனத்தைச் செலுத்தியதை அல்லாஹ் கண்டிக்கிறார். இங்கும் நபி கூறிய, செய்த அனைத்தும் வஹீயே என்போர் என்ன கூறுகிறார்கள்? நபியை, குருடரைப் புறக்கணிக்கும்படி அறிவித்து விட்டு பின்னர் கண்டிப்பதுபோல் கண்டிக்கிறார் என்றா? அல்லாஹ்வின் மீதே பழி சுமத்துவது மாபெரும் குற்றமல்லவா இது? ஒரு மெய்யான நம்பிக்கை கொண்டவர் எவ்வாறு இப்படி நினைக்க முடியும்? (மேலும் பார்க்க, சிந்திக்க: (33:36)

வசனம் 10:15 ல் அல்லாஹ் நபியைக் கூறும்படி பணிப்பதென்ன? "மறுமையில் நம் சந்திப்பை நம்பாதவர்கள் கூறுகிறார்கள்" இது அல்லாத வேறு குர்ஆனைக் கொண்டு வாரும் அல்லது இதை மாற்றி விடும் என்று நீர் கூறும்: என் மன இஷ்டப்படி இதை மாற்றிவிட எனக்கு உரிமையில்லை, எனக்கு என்ன வஹீயாக அறிவிக்கப்படுகிறதோ அதை தவிர வேறு எதையும் நான் பின்பற்றவில்லை.

மேலும் 6:19ல் இந்த குர்ஆன் எனக்கு வஹீயாக அறிவிக்கப்படுகிறது என்று சாட்சிகளிலேயே பெரிய சாட்சியான அல்லாஹ்வைச் சாட்சி வைத்துக் கூறும்படி அல்லாஹ் நபியைப் பணிக்கிறார். இதன் பின்னரும் நபி கூறிய அனைத்தும் வகியே என்போர் சிந்திக்க மறுப்பவர்களன்றி வேறு யார்? சிந்திப்போருக்கு மட்டுமே இக் குர்ஆன் வழிகாட்டும் என்று அல்லாஹ் குர்ஆனில் பல இடங்களில் கூறுகிறார். (பார்க்க 7:179, 8:22, 47:24)

குர்ஆன் முழுவதயும் ஒரு முறை படித்து விட்ட நம்பிக்கையாளர்களுக்கு குர்ஆனைத் தவிர வேறு எதற்கும் தூதரின் அங்கீகாரம் இல்லை என்பது தெளிவாக விளங்கி விடும்.(பார்க்க 5:48-50; 6:19; 7:2-3; 10:36,37; 13:36,37; 179,41; 18:27,54; 21:24; 31:6,7; 39:27,28,29)

குரஆனைத் தவிர வேறு எந்த ஒரு செய்தியும் முழுமையான நம்பிக்கைக்குத் தகுதியானதல்ல. குர்ஆன் அல்லாஹ்வின் சொல். குர்ஆனுக்கு ஆசிரியர் அல்லஹ் முழுமையான நம்பிக்கைக்கு உரியவர் அல்லாஹ் ஒருவர் மட்டுமே. ஹதீஸ்களுக்கு ஆசிரியர் முஹம்மது நபி அல்ல ஹதீஸ்கள் மனிதர்கள் மூலம் நாம் பெற்றது. அதை முழுமையாக நம்புவது என்பது அல்லாஹ்வைப் போல் சில மனிதர்களும் முழுமையான நம்பிக்கைக்கு உரியவர்களே என நம்புவதாகும். இது ஷிர்க் (இணைவைப்பு) என்பது சிந்திப்பவர்களுக்குத் தெளிவாக விளங்கும்.

இன்னும் ஹதீஸ்களைப் பின் பற்றுவோர் எடுத்து வைக்கும் வாதங்களை ஒவொன்றையும் இன்ஷா அல்லாஹ், தொடர்ந்து குர்ஆனின் ஒளியில் அலசுவோம்.

## அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள்

4. அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக, பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும். தொழுகையை நிலைநாட்ட வேண்டும். மேலும் ஜக்காத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதை தவிர அவர்களுக்கு கட்டளையிடப்படவில்லை. இது தான் நேரான மார்க்கமாகும். (98:5)

# பரிந்துரை - ஷஃபாத்

**ஆக்கம் : அபூ நஸீரன்**

அல்குர்ஆன் அல்லாத வேறு ஆதாரங்களை பின்பற்றுவோர் அனைவரும் நம்பும் ஒரு விஷயம் என்னவென்றால் இறைவனிடத்தில் மகான்கள் நமக்காகப் பரிந்துரை செய்வார்கள் என்பதாகும். கிறித்துவர்கள் யேசு (ஈஸாநபி) பிதாவிடத்தில் த்ங்களுக்காகப் ப்ரிந்த பேசுவார் என்று நம்புவது போலவே இன்றைய முஸ்லிம்களும் முஹம்மத் நபி அல்லாஹ்விடத்தில் தங்களுக்காகப் பரிந்துரை செய்வார்கள் என்று நம்புகிறார்கள். 'லா இலாஹ இல்லல்லாஹ்' எனறு கூறிவிட்டால் போதும் முஹம்மத் நபியின் பரிந்துரை கிட்டும் என்றும் ஹதீஸ்கள் அவர்களுக்கு வாக்களிக்கிறன.

பரிந்துரை பற்றிக் குர்ஆன் என்ன கூறுகிறது என்று பார்ப்போம் சூரா 39 (அல் ஜுமர்) 3 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றார்.

அறிந்து கொள்வீராக! (39:03) மார்க்கம் அல்லாஹ்வுக்கு மட்டுமே முழுமையாக அறப்பணிக்கபட வேன்ண்டும். இன்னும், அல்லாஹ்வை யன்றிப் பாதுகாவலர்களை எடுத்துக் கொண்டிருப்பவர்கள் கூறுகிறார்கள் "இவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகில் சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவே அன்றி நாங்கள் இவர்களை வணங்கவில்லை." அவர்கள் தர்க்கம் செய்து கொள்வது பற்றி அல்லாஹ் தீர்ப்பளிப்பார் அல்லாஹ் இத்தகைய பொய்யர்களை, நிராகரிப்பவர்கள் நேர்வழியில் செலுத்தமாட்டார்."

மிகத்தெளிவான இவ்வசனம் முஹம்மது நபி நமக்கு ஷஃபாஅத் செய்வார் அல்லாஹ்வின் பால் நம்மை நெருக்கி வைப்பார், என்று நம்புவது தவறு என்றும் அது பொய்யென்றும் அவ்விதம் நம்புவது நிராகரிப்பு என்றும் நமக்குக்கூறுகிறது.

மேலும் 39:38ல் அல்லாஹ் அல்லாஹ் கூறுகிறார் "கூறும்: அல்லாஹ் எனக்கு ஏதேனும் கெடுதியை நாடினால் நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவை அக்கெடுதியை நீக்கி விட முடியுமா?

அல்லது அவர் எனக்கு அருள் செய்ய நாடினால் அந்த அருளை இவை தடுத்து விட முடியுமா? கூறும் அல்லாஹ் எனக்குப் போதுமானவர் நம்பிக்கை வைப்போர் அவர் மீது மட்டுமே நம்பிக்கை வைக்க வேண்டும்." (பார்க்க 36:23)

அல்லாஹ் கேட்கும் கேள்வி! "அல்லாஹ் தன் அடியார்களுக்குப் போதுமானவர் அல்லவா?" -39:36

இதன் பின்னரும் இவர்கள் உள்ளம் ஏன் முகம்மது நபியின் பரிந்துரையை நாடுகிறது? அல்லாஹ்வை விட முஹம்மது நபி கருணையுடைவர் என்று என்ணுகிறார்களா? அல்லது மனிதர்களின் கஷ்ட நிலையை அல்லாஹ் அறியமாட்டார. மனிதர் என்ற முறையில் முஹம்மது நபி மனிதர்களுடைய கஷ்டங்களை அல்லாஹ்வுக்கு விளக்கிக் கூறுவார், அல்லாஹ் ஏற்றுக்கொள்வார் என்று என்ணுகிறார்களா! முஹம்மது நபிக்கு மனிதர்களை நரகிலிருந்து வெளியேற்றும் சக்தியும், சுவனத்திற்கு யார் தகுதியுடையவர்கள் என்ற அறிவும் இருப்பதாக என்ணுகிறவர்கள் 39:43 ஐப் பார்த்து தெளிவு பெற்றுக்கொள்ளட்டும்.

மேலும் 39:44 "அல்லாஹ் கூறுகிறார் பரிந்துரை அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது வானங்கள் பூமியின் ஆட்சி அனைத்தும் அவருக்கே உரியது அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்."

இத்தனை வலிமையான அல்லாஹ்வின் வசனங்களை கூறி நினைவூட்டினாலும் இன்றைய முஸ்லிம்கள் இவை அனைத்தும் காஃபிர்களுக்கு உள்ள வசனகள் நம்பிக்கையாளர்களுக்கு நிச்சயம் ஷஃபா அத் உண்டு என்பர். ஷஃபாஅத் நிச்சயம் வேண்டும் என்று அழுத்தமாக கூறுவர். இத்தகையோருக்காகவே அல்லாஹ் 6:51ல் தெளிவுபடுத்துகிறார்.

"எவர் தன் இறைவன்முன் கொண்டுவரப்படுவது பற்றி அஞ்சுகிறார்களோ அவர்கள் மீட்சி பெறும் பொருட்டு அவர்களுக்கு இவ் வேதத்தை கொண்டு நீர் எச்சரிக்கை செய்யும். அவரை (அல்லாஹ்) தவிர வேறு பாதுகாப்பாளரோ, பரிந்து பேசுபவரோ அவர்களுக்கு இல்லை." (6:51)

இதன் பின்னரும் ஷஃபாஅத் உண்டு என்பவர்கள் மறுமையில் இறைவன் முன் கொண்டு வரப்படுவதைப் பற்றி அச்சமில்லாமல் இருக்கிறார்கள் என்பதன்றி இதற்கு வேறு என்ன பொருள்?

மேலும் நரகிலிருந்து நம்மை ஈடேற்ற ஷ்ஃபாஅத் உண்டு என்றால் பின்னர் இறைவன் முன் கொண்டுவரப்படுவதைப் பற்றி என்ன அச்சம் இருக்கமுடியும்?

அல்லாஹ் இவ்வளவு தெளிவாக ஷ்ஃபா அத் கிடையாது என்று நேரடியாகக் கூறியும் "அவருடைய அனுமதியின்றி யார்தான் அவரிடம் பரிந்துரை செய்ய முடியும்?"(2:55) என்ற வசனத்தையும், "அந்நாளில் அர்ரஹ்மான் யாருக்கு அனுமதி அளித்து, யார் அவர் விருப்பத்திற்கு ஒப்ப பேசுகிறார்களோ அவர்களைத் தவிர வேறு எவருடைய பரிந்துரையும் பலனளிக்காது (20:109) என்ற வனத்தையும்," (தூதர்களுக்கு) அவர்களுக்கு முன்னால் நடந்ததையும் அவர்களுக்கு பின்னால் நடப்பதையும் அவர் நன்கறிவார். யாரை அவர் பொருந்தி ஏற்றுக் கொள்வாரோ அவருக்கனி அவர்கள் பரிந்து பேசமாட்டார்கள். அவர்களே அவர் மேலுள்ள அச்சத்தால் நடுங்குபவர்களாக இருப்பார்கள் (21:28)"என்ற வசனத்தையும் ஹதீஸ்களுக்காக வாதாடுவோர் எடுத்துக் காண்ப்பார். எடுத்துக் காட்டி பின்னர் அதில் இல்லாத விஷயமான `முஹம்மது நபிக்கு மட்டும் ஷ்ஃபாஅத் உண்டு என்ற விஷயத்தை இவ்வசனங்கள் கூறுவதச்கக் கூறி குர்ஆனைப் புரட்டிக்கூடப் பார்த்திராத பாமர முஸ்லிம்களை வழிகெடுப்பார்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று வசனங்களையும் முன் பின் தொடரோடு குர்ஆன் மொழிபெயர்ப்பைப் படிப்பவர்கள் அவ்வசனங்கள் ஷஃபாஅத் இல்லை என்றும், பலனளிக்காது முறையில் என்றும், அல்லாஹ் நாடியவர் மட்டுமே சுவனம் செல்ல முடியும் என்றும் தெளிவுபடுத்துகிறது என்பதை மெய்யான நம்பிக்கை கொண்டவர்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வசனங்களின் படி சுவனத்தில் நுழைந்த அனைவரும் தத்தம் அன்பிற் குரியவர்களுக்காகப் பரிந்துரை செய்வர் என்றும், அந்த நபர் சுவனத்திற்குத் தகுதி உடையவராக இருப்பின் அவர் சுவனம் நுழைவார் என்றும் நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆக ஷஃபாஅத் என்பது மட்டும் நம்மை சுவனத்தில் நுழையச் செய்து விடமுடியாது என்பது நன்கு புலனாகிறது.

இப்றாஹிம் நபி தன் தந்தைக்கு பரிந்துரை செய்ய முடியாது (9:114) நூஹ் நபி தன் மகனுக்கும் மனைவிக்கும் பரிந்துரை செய்ய முடியாது (11:46) முஹம்மது நபி தன் சிறிய தந்தைக்கோ, உறவினர்களுக்கோ பரிந்துரை செய்ய முடியாது (9:80) நிலைமை இவ்வாறு இருக்கும் போது , ஒரு நபியோ, அவ்லியாவோ முன்பின் தெரியாத தனக்காகப் பரிந்துரை செய்வார்கள் என்று எவ்வாறு ஒருவன் எதிர்பார்க்க முடியுமா? மேலும் ஷஃபாஅத் சம்பந்தமான கீழ்கண்ட குர்ஆனின் வசனங்களையும் பார்க்கவும் (2:48,123, 6:70,94, 7:53, 10:3, 19:87, 26:100, 30:13, 32:4, 36:23, 40:18, 43:86, 53:26, 74:48.)

அல்லாஹ் குர்ஆனில் இவ்வளவு தெளிவாக ஷஃபாஅத் கிடையாது என்றும் பலனளிக்காது என்றும் அறிவித்து விட்ட பின்னர் வேறு ஆதாரங்களை நம்பி ஷஃபாஅத் உண்டு என்பவர்களுக்கு ஒரு வசனம்.

"எவர் தன் இறைவனுடைய வசனங்களைக் கொண்டு உபதேசிக்கப்பட்டும் அவற்றைப் புறக்கணித்து தன்னிரு கரங்களும் செய்த குற்றங்களை மறந்து விடுகிறானோ அவனை விடப் பெரிய அக்கிரமக்காரன் வேறு யார் ? நிச்சயமாக நாம் அவர்களுடைய இருதயங்களின் மீது இதை விளங்கிக் கொள்ளாதவாறு திரைகளையும், அவர்களுடைய செவிகளில் செவிட்டுத்தனத்தையும், ஏற்படுத்தியிருக்கின்றோம். ஆகவே நீர் அவர்களை நேர்வழியின் பால் அழைத்தாலும் அவர்கள் ஒரு போதும் நேர்வழி அடைய மாட்டார்கள். (18:57)

எனவே மெய்யான நம்பிக்கையாளர்கள், குர் ஆனுக்கு போட்டு வைத்திருக்கும் திரைகளை விலக்கி அல்லாஹ் என்ன கூறுகிறார் என்பதை கவனத்துடன் கேட்டு, குர் ஆனை விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்.

# அல்லாஹ் மட்டும்

**முகம்மது ஆஜம்**

**அல்லாஹ்வை மட்டும் வணங்கிடுங்கள்**

1. வணக்கத்திற்குரியவர் அவரன்றி வேறு இறைவன் இல்லை, அவர் அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் மிகவும் பரிசுத்தமானவர் (அல்குர் ஆன் 9:31 )

2. அவரே அல்லாஹ், வணக்கத்திற்குரிய இறைவன் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை. அவரே பேரரசர், மிகப்பரிசுத்தமானவர் ,சாந்தியளிப்பவர், தஞ்சமளிப்பவர், பாதுகாப்பவர், மிகைப்பவர், அடக்கியாள்பவர், பெருமைக் குரித்தானவர் அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவர். (59:23)

3. மனிதர்களே! நீங்கள் உங்களையும், உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். நீங்கள் தக்வா (பயபக்தி) உடையோராகலாம். (2:21)

# குர்ஆனில் இறைவனின் முத்திரை 19

தொடர் – 1

இப்னு தாஜுதீன்

**வேதத்தின் அற்புதங்கள்**

மனிதர்கள் பல்வேறு மொழிகளில் எழுதிய கோடிக்கணக்கான புத்தகங்கள் எதிலும் காணப்படாத, ஓர் அற்புதமான, தனித்தன்மை வாய்ந்த அமைப்பில், அல்லாஹ்வின் சொல்லான அல்குர்ஆன் அமையப்பெற்றிருக்கிறது. குர்ஆனில் உள்ள எல்லா விஷயங்களும் மனிதசக்திக்கு அப்பாற்பட்ட ஒரு கணித அமைப்பில் கட்டப்பட்டிருக்கிறது. அதில் உள்ள சூராக்கள், வசனங்கள், வார்த்தைகள் சிலகுறிப்பிட்ட எழுத்துக்களின் எண்ணிக்கைகள் ஒரே மூலச் சொல்லிலிருந்து பிறந்த வார்த்தைகளின் எண்ணிக்கைகள், இறைவனின் பெயர்களின் எண்ணிக்கைகள், அதன் வகைகள், சில வார்த்தைகளின் தனித்தன்மை வாய்ந்த எழுத்து அமைப்புகள் இன்னும் அதன் உள்ளடக்கத்திற்கும் அப்பாற்பட்ட பற்பல விஷயங்களும் அற்புதக்கணித அமைப்பில் ஆக்கப்பட்டிருக்கிறது. இக்கண்டுபிடிப்புகள் இரண்டு விஷயங்களை நிருபிக்கின்றன. ஒன்று இவ்வமைப்பு மனிதர்களும் , ஜின்களும் ஒன்று சேர்ந்து தங்களிடமுள்ள அனைத்து சாதனங்களையும் பயன்படுத்தினாலும் இதைப்போன்ற ஒன்றை அமைக்க முடியாது என்பதாலும் இது இறைவனால் மட்டுமே முடியும் என்பதாலும், இறைவனிடமிருந்து தான் இறங்கியது என்பதை நிரூப்பிப்பது, இரண்டாவது அல்குர்ஆனில் எந்த ஒரு சிறு மாற்றம் செய்தாலும் உடனடியாகத் தெரிந்து விடும் என்பதால் (இவ்வற்புத அமைப்பு ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பின் வெளிப்படையாக காட்டிக் கொடுக்கும் விதத்தில் அல்லாஹ்வால் அமைக்கப்பட்டுள்ளது.) அது குர்ஆன் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நிரூபிக்கிறது.

ஆம்! மனித சரித்திரத்தில் முதல் முறையாக ஒரு வேதம் ,தனக்குள்ளேயே, அது இறைவனிடமிருந்து வந்ததுதான் என்பதற்கான ஆதாரங்களைக் கொண்டதாக அமைந்து உள்ளது . இத்தகவல்கள் அனைத்தும் கண்ணால் காணக் கூடிய, அறிவால் உணரக்கூடிய உண்மைகள் ஆகும் (Physical Facts) தன்னிடம் ஒரு குர்ஆன் பிரதி வைத்திருக்கும் எந்த ஒரு மனிதரும் இதில் உள்ள உண்மைகள், தகவல்கள் சரியானதுதானா என்பதைச் சரிபார்த்துக் கொள்ள முடியும் . குர்ஆன் முழுமையும் `19' என்ற எண்ணால் கணித அமைப்பில் கட்டப்பட்டிருக்கிறது . இந்தப் 19 என்ற எண் யாருடைய சுயமான கண்டுபிடிப்பும் அல்ல அல்லாஹ் அல்குர் ஆனில் இந்த 19 என்ற எண்ணை சூரா 74 ல் வசனம் 25 ல் இக்குர் ஆன் மனிதனின் சொல்லே எனக்கூறும் கயவர்களுக்கு பதிலடியாக வசனம் 30ல் அல்லாஹ் கூறுகிறார், " அதன்மீது “19" (இருக்கிறது)

மேலும் தொடர்ந்து வசனம் 31 ல் "19" என்னும் எண்ணிக்கை நிராகரிப்போருக்குக் குழப்பமாக, சோதனையாக, தொந்தரவு தருவதாக அமையும் என்றும் (ii) வேதங் கொடுக்கப்பட்ட யூத, கிறித்துவர்களுக்கு, இது இறைவனிடமிருந்து வந்த உண்மைதான், இறைவேதம்தான், என்ற உறுதியைக் கொடுக்கும் என்றும் (iii) மெய்யான நம்பிக்கை கொண்டவர்களுக்கு மேலும் நம்பிக்கையை அதிகப்படுத்தும் , உறுதிப்படுத்தும், என்றும், (IV)

மேலும் வேதங்கொடுக்கப்பட்டோருக்கும், நம்பிக்கை கொண்டோருக்கும், (அதற்கு முன் இல்லாத) உறுதியைக் கொடுக்கும் என்றும் (V) நெஞ்சங்களில் சந்தேகம் என்னும் நோயுடைய நயவஞ்சகர்களுக்கும், நிராகரிப்பாளர்களுக்கும் விளங்கிக் கொள்ள முடியாமல் போவதல் மூலம் அவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் என்றும் கூறுகிறார். (பார்க்க சூர 74)

குர் ஆனில் அல்லாஹ் பற்பல விஷயங்களைக் காலம் கனியும் போது தானே நம்பிக்கை கொண்டவர்களுக்கு விளக்குவதாக வாக்களிக்கிறார். (பார்க்க 6:67, 75:16-19, 55:1-2, 2:242, 3:103,118)

மேலே குறிப்பிடப்பட்ட (74:30,31) வசனத்திற்கு விளக்கமாக ஒரே ஒரு ஹதீஸைக் கூட, "குர் ஆன் வசனங்களுக்கு ஹதீஸ்கள் தான் விளக்கம்" என்போர் கொண்டு வரமுடியாது. ஏனெனில் இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள், ஹதீஸ்களை உருவாக்கி, மார்க்கமாக்கி வைத்தவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்கிறது ஆகவே அவர்கள் இவ்விஷயத்தைப் பற்றி (ஹதீஸ்களில்) மூச்சுக் கூட விடவில்லை. பின்னால் வந்த முஃபஸ்ஸிரின்கள் (விரிவுரையாளர்கள்) சிலர், சில யூகங்களைக் கூறினாலும் அவை தங்கள் யூகங்களே என்றும் ஒப்புக்கொண்டு விட்டனர். ஆக இவ்வசனங்களுக்கு உரிய சரியான விளக்கம் இது வரை மனித சமுதாயத்திற்குக் கிட்டவில்லை என்பது தெளிவு. இதைப்போன்ற மற்றொரு விஷயம் குர்ஆனில் காணப்படும் முத்திரை எழுத்துக்கள் (குர் ஆனில் உள்ள 29 சூராக்கள் சிலகுறிப்பிட்ட எழுத்துக்களை ஆரம்பத்தில் முத்திரையாகக் கொண்டுள்ளது, உம், அலிஃப், லாம், மீம், இவ்வெழுத்துக்களுக்கு என்ன விளக்கம் என்பது ஹதீஸ்களிலும் இல்லை, 1400 வருடங்களாக எந்த அறிஞரும் அதற்கு சரியான விளக்கம் கூறுவும் இல்லை.

ஆம் அல்லாஹ் மக்களுக்கு அறிவிக்க இருக்கும் விஷயத்தை அவருக்கு முன்னர் யார்தான் அறிவிக்க முடியும்! அல்லாஹ் "19" என்ன என்பதையும், முத்திரை எழுத்துக் களுக்கு அர்த்தம் என்ன என்பதையும் கம்ப்யூட்டர் யுகத்தில் (ComputerEra) மக்களுக்கு அறிவிக்க நாடியிருக்கிறார். இப்பொழுது அவற்றிக்கான முழு விளக்கங்களையும் அல்லாஹ் நமக்கு அறிவித்துத் தருவதோடு மட்டுமல்லாமல் அத்துடன் பற்பல காரியங்களையும் நடத்தியிருக்கிறார். அவை என்ன என்பதையும் அவ் விளக்கங்கள் என்ன என்பதையும் தொடர்ந்து இவ்விதழில் விரிவாகவும் விளக்கமாகவும் காண்போம் இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் இறக்கியருளிய அல்குர்ஆன் முழுமையும் கம்ப்யூட்டரில் செலுத்தி குர்ஆனை ஒவ்வொரு எழுத்தாக ஆராய்ந்த போது கிடைத்த தகவல்கள், குர்ஆன் முழுதும் ஒரு அற்புதமான கணிதக்கட்டமைப்புக் கொண்டதாகவும், "19" என்ற எண்ணைப் பொதுவானதாகக் கொண்டு குர்ஆன் கட்டப்பட்டிருக்கிறது என்றும் உலகிற்கு அறிவித்தது. அதன் மூலம் இவ்வுலகிற்கு ஒரு புதிய நினைவூட்டலையும் அளித்தது. அத்தகவல்களில் சிலவற்றை இவ்விதழில் காண்போம்.

1.குர்ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம்பெறும் அரபி எழுத்துக்கள்----------------------------------------------------------19

2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ------------------------------------19X6

3.'பிஸ்மில்லாஹ்' குர்ஆனில் 114 முறை உள்ளது 114-------------------------19X6 (சூரா 9 ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27 வது சூராவில் இரு முறை உள்ளது) சூரா 27 வசனம் 30 ஆக 27+30=57----------------------------19X3.

4. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும் சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11....27) வரும் கூட்டுத்தொகை 342=---------------------------------------19X18

5. இதில் முக்கிய விஷயம் என்னவென்றால் இருமுறை பிஸ்மி இடம்பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம் பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 =----------------------------------------------19X18

6. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும் வார்த்தைகள் சரியாக------------------------------------------------------------19

7. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும் எழுத்துக்கள் சரியாக 76--------------------------------------------- 19X4

8. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96 ல் இடம்பெறும் வசனங்கள்----------------------------------------------------------------19

9. 96 ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304-----------------------19X16

10. இறுதி வஹீயான சூரா 110ல் இடம்பெறும் வார்த்தைகளும் சரியாக.-----19

11. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2 க்கும் முத்திரை எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க் கும் இடையில் முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன------------------------------19X2

12. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2000, 3000, 5000, 50,000, 100,000 இந்த எண்களின் கூட்டுத்தொகை 162146---------------------------------------------------------19x8534

ஆச்சயர்மாக உள்ளதா? அதிகம் ஆச்சர்யப்படாதீர்கள்! இன்னும் ஏராளமான ஆச்சர்யங்கள் மிச்சமுள்ளன அவற்றை இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து காண்போம்.

**அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள்**

5. உங்கள் இறைவன் கூறுகிறார்: என்னையே நீங்கள்பிரார்த்தியுங்கள் நான் உங்களுக்கு பதிலளிக்கிறேன். எவர்கள் என்னைவணங்குவதைவிட்டும் பெருமையடித்துகொண்டிருக்கின்றார்களோ அவர்கள் சிறுமையடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள். (40:60)

# கண்ணியம் அல்லாஹ்வுக்கே!

இந்த இதழில் இறைவனைக் குறிப்பிடும் எல்லா இடங்களிலும்' அவன்' என்ற சொல்லுக்கு பதிலாக' அவர்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

'அவன்', 'அவர்', என்ற இரண்டு சொற்களும் ஒருமையாக இருப்பினும் கண்ணியமானவர்களை, உதாரணமாக நபிமார்களை மகான்களை, ஆசிரியர்களை, தந்தையை, மற்றும் மரியாதைக் குரிய அனைவரையும் குறிப்பதற்கு 'அவர்' என்ற சொல்லையே நாம் பயன்படுத்துகிறோம்.

ஆனால் எல்லா வல்லமையும், கண்ணியமும் மிக்க இறைவனைக் குறிப்பிடும்போது கண்ணியமற்றவர்களைக் குறிப்பிடும்' அவன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம்.'

'அவன்' என்ற சொல் மட்டுமே ஒருமையைக் குறிக்கும் என்று வாதிடுபவர்கள் மேலே கூறப்பட்ட மரியாதைக் குரியவர்களை' அவன்' என்ற சொல்லால் அழைப்பார்களா?

நம் இஸ்லாமிய புத்தகங்களில் ஷைத்தான்களை, வழிகேடர்களை மற்றும் கண்ணியக் குறைவானவர்களைக் குறிப்பிட 'அவன்' என்ற சொல்லையே உபயோகப்படுத்துகிறோம். இத்தகைய சொல்லால் கண்ணியம் மிகுந்த இறைவனை அழைக்கலாமா?

"அறிந்து கொள்க! கண்ணியம் எல்லாம் அல்லாஹ்வுக்கு உரியது." (35:10) என்ற வசனத்தின் அடிப்படையில்' அவன்', என்று குறிப்பதை விட' அவர்' என்று குறிப்பது சிறந்தது, கண்ணியமிக்கது.

குறிப்பு: குர்ஆன் வசனங்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டே நமது இதழில் அனைத்து ஆக்கங்களும் அமையும். வாசகர்கள் இதில் குறிப்பிட்டிருக்கும் வசனங்களை, தங்களிடமுள்ள எந்த ஒரு குர்ஆன் மொழிபெயர்ப்பிலும் ஒத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

# சிந்தனைக்கு :-

**தொகுப்பு : - ஜீனத் மஹ்ஜபீன்**

## மார்க்க அறிஞர்களின் கவனத்திற்கு

திருக்குர்ஆனில் கொடுக்கப்பட்டிருக்கும் கீழ்கண்ட வசனங்கள் எடுத்துக் கூறும் உண்மைகளில் எதைப் பொய்யாக்கப் போகிறீர்கள்?

1. வேதம் கொடுக்கப் பெற்றவர்களிடம் "வேதத்தை மறைத்து விடாது ஜனங்களுக்கு தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்." என்று அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை ஞாபகமூட்டும். எனினும், அவர்கள் இவ்வுறுதி மொழியைத் தங்களின் முதுகுகளின் புறமாக எறிந்துவிட்டு இதற்குப் பிரதியாகச் சொற்பக் கிரயத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் பெற்றுக் கொண்டது மிகக் கெட்டது. (3:187)
2. ஒரு மனிதருக்கு அல்லாஹ் வேதத்தையும் ஞானத்தையும் நபித்துவத்தையும் கொடுத்தபின்னர், அவர் மனிதர்களை நோக்கி, " அல்லாஹ்வையன்றி என்னையே வணங்குங்கள்" என்று கூறுவதற் கில்லை. ஆயினும், நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டும், கற்றுக் கொண்டும், இருப்பதன் காரணமாக, இறை அடியார்களாக ஆகிவிடுங்கள்." (3:79)
3. எவர்கள் மடமையினால் பாவத்தைச் செய்து பின்னர். பச்சாத்தாபப்பட்டு, அதிசீக் கிரத்தில் நீங்கி விடுகின்றார்களோ அத்தகையோரை மன்னிப்பதுதான் அல்லாஹ்வின் மீது கடமையாகி விடுகின்றது. ஆகவே அல்லாஹ் அவர்களை அன்புடன் நோக்குகின்றார். அல்லாஹ் நன்கறிந்தோரும் ஞானமுடையோருமாயிருக்கின்றார். (4:17)

1. அல்லாஹ் உங்களை (3:18)ல் எச்சரிக்கை செய்கின்றார்.
2. முஹம்மத் நபியவர்கள் கூறாததை கூறியதாகச்(ஸலவாத்து) சொல்லி தொழுகையில் குறைபாடு செய்வதை (3:79)ல் நினைவூட்டுகிறார்.
3. அல்லாஹ் உங்களுக்கு (4:17)ல் நம்பிக்கையூட்டுகிறார். அல்லாஹ் உங்களை அன்புடன் நோக்குவாராக!

# புதிய நினைவூட்டல் மாத இதழ்

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

## அறிவிக்கிறோம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர் இறை**
**ஒரே செய்தி**

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662